DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 50/2025 LW– 14 PW– 5

| | |
|---|---|
| Name | : சிவராமகிருஷ்ணன் (புலன் விசாரணை அதிகாரி) |
| Father's/Husband's Name | : சொக்கலிங்கம் |
| Village | : தாடிக்கொம்பு காவல் நிலையம் (காவல் ஆய்வாளர்) |
| Taluk | : திண்டுக்கல் |
| District | : திண்டுக்கல் மாவட்டம் |
| Age | : 47/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 8th day of April 2026

**(எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.01.2025ம் தேதி நத்தம் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்தேன். இதற்கு முன்பு இதே காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் ஆய்வாளர் திரு.தங்கமுனியசாமி மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.தர்மர் ஆகியோர்களின் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 22.12.2024ம் தேதி 19.00 மணியளவில் அப்போதைய சார்பு ஆய்வாளர் திரு.தர்மர் என்பவர் நிலைய பொருப்பில் இருந்தபோது நத்தம் பாலப்பநாயக்கன்பட்டியை சேர்ந்த ராஜேந்திரன் மகன் இளவரசன் என்பவர் காவல் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று நத்தம் காவல் நிலைய கு.எண்.684/2024

சட்டப்பிரிவுகள் 281, 106(1) (Double death) BNS வழக்காக பதிவு செய்துள்ளார். (**முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

2. பின்பு இந்த வழக்கை காவல் ஆய்வாளர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான நத்தம் – மதுரை பைபாஸ் ரோடு சாத்தாம்பாடி பிரிவு அருகே சென்று சம்பவ இட சாட்சிகள் வினோத் மற்றும் ராஜா, த/பெ.ஊர்க்காவலன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்.(**அந்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ–5 ஆகவும், பார்வை மகஜர் அ.த.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**) பின்னர் பட்டியல் சாட்சிகளான இளவரசன், ராஜா, த/பெ.ராஜேந்திரன், சதீஸ்குமார், பிரவீன்குமார், வினோத் மற்றும் ராஜா, த/பெ, ஊர்க்காவலன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரியான ரஞ்சித் என்பவரை காவல் ஆய்வாளர் தேடிவந்துள்ளார்.

3. பின்னர் 23.12.2024ம் தேதி வாகன விபத்தில் இறந்த நபரான ராஜேந்திரன் என்பவரது பிரேதத்தை நத்தம் அரசு மருத்துவமனையில் காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை செய்தும், மேலும் இவ்வழக்கில் இறந்து போன மற்றொரு நபரான சுமதி என்பவரின் பிரேதத்தை சார்பு ஆய்வாளர் திரு.தர்மர் என்பவர் பிரேத விசாரணை செய்தும், (**ராஜேந்திரன் மற்றும் சுமதி ஆகியோரின் பிரேத விசாரணை அறிக்கைகள் அ.த.சா.ஆ.7 மற்றும் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பின்னர் பிரேத பரிசோதனை அலுவலாக முதல்நிலை காவலர் ஆண்டிச்சாமி என்பவரை நியமித்தும், மேலும் வழக்கில் இறந்துபோன மற்றொரு நபரான சுமதி என்பவரின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்வதற்காக உதவி ஆய்வாளர் தர்மர் அவர்கள் பெண் காவலர் கலைச்செல்வி என்பவரை நியமித்தும் நத்தம் அரசு மருத்துவமனைக்கு பணிக்கு அனுப்பியுள்ளார். (**ராஜேந்திரன் என்பவரது பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.9 ஆகவும், சுமதி**

**என்பவரது பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**)

4) இந்நிலையில், 27.12.2024ம் தேதி நத்தம் காவல் நிலையத்தில் வைத்து எதிரியான ரஞ்சித், த/பெ.ஜெயக்கொடி, 4வது குறுக்கு தெரு, ஜெய் பீமா நகர், பெங்களுர் தெற்கு என்பவரை காவல் ஆய்வாளர் கைது செய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார். மேலும் 27.12.2024ம் தேதி எதிரி ஓட்டி வந்த 4 சக்கர வாகனமான KA 01 MF 8552 என்ற பதிவெண்கொண்ட மாருதி ஸிப்ட் என்ற காரை மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தியுள்ளார். (**KA 01 MF 8552 என்ற பதிவெண்கொண்ட மாருதி ஸிப்ட் என்ற காரின் மோட்டார் வாகன ஆய்விற்கான வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) இந்நிலையில் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு.தங்கமுனியசாமி பணி மாறுதலில் சென்றுவிட்ட நிலையில் இந்த வழக்கை நான் எனது புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 20.01.2025ம் தேதி இறந்துபோன நபர் ஓட்டி வந்த TN 57 K 0357 என்ற பதிவெண்கொண்ட ஸ்பிளண்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன்.(**TN 57 K 0357 என்ற பதிவெண்கொண்ட ஸ்பிளண்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்விற்கான வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

5) பின்பு அன்றையதினமே இவ்வழக்கில் மருத்துவ நமுனா பதிவு செய்த நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.ஜியோனி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ராஜேந்திரன் மற்றும் சுமதி ஆகியோரின் பிரேதங்களை பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்கிய நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. திலீப் ராஜேஷ்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். (**ராஜேந்திரன் என்பவரது பிரேத பரிசோதனை**

**அறிக்கை அ.த.சா.ஆ.13 ஆகவும், சுமதி என்பவரது பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.14 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**)

6) மேலும் அன்றைய தினமான 20.01.2025ம் தேதியே இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி மற்றும் இறந்துபோன நபர் ஆகியோர் ஓட்டி வந்த வாகனங்களை மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தி சான்று வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கருப்பசாமி என்பவரை விசாரித்து அவர் அளித்த அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். (**KA 01 MF 8552 என்ற பதிவெண்கொண்ட மாருதி ஸிப்ட் என்ற காரின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.த.சா.ஆ.15 ஆகவும், TN 57 K 0357 என்ற பதிவெண்கொண்ட ஸ்பிளண்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.த.சா.ஆ.16 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**)

7) மேலும், பிரேத பரிசோதனை அலுவலாக நியமிக்கப்பட்ட முதல்நிலை காவலர் ஆண்டிச்சாமி மற்றும் பெண் காவலர் கலைச்செல்வி ஆகியோர்களை அன்றையதினமே தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 20.01.2025ம் தேதி எதிரி ரஞ்சித் என்பவர் மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS பிரிவுகளின்படி குற்ற இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

8) காவல் ஆய்வாளர் திரு. தங்க முனியசாமி அவர்கள் விசாரணை செய்த சாட்சிகளை நான் மீண்டும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரை யார் எழுதினார் என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன் புகார்தாரர் தான் எழுதியுள்ளார். முதல் தகவல் அறிக்கை ஆனது 9 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 தனது புகார் மனுவில் மதுரைக்கு சென்று விட்டு திரும்ப ஊருக்கு வந்ததாக சொல்லும் நிலையில் அவர் வந்த இருசக்கர வாகனத்தின் எண் குறித்து கேட்டு விசாரித்து தெரிந்து

கொள்ளவில்லை என்றால் சரிதான். முடக்குச்சாலை அருகே ஒருவரை பார்த்து விட்டு இறந்து போன நபர்கள் இருவரும் இரு சக்கர வாகனத்தில் நத்தம்–மதுரை நான்கு வழி தேசிய நெடுஞ்சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நேர் எதிரே வடபுறமாக வந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சாத்தம்பாடி பிரிவில் குறுக்கே சென்ற போது விபத்து நடந்ததாக தெரிய வருகிறது என்றால் சரிதான். சாத்தம்பாடி பிரிவில் (கோமணாம்பட்டி பிரிவு) குறுக்கே செல்வதற்கு பேரிகார்டோ, வேறு எந்த வசதிகளோ இல்லை என்றால் சரிதான்.

9) விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகே மணி வீடு, செல்வராஜ் வீடு, சேவகமூர்த்தி வீடு உள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில் மேற்படி சாட்சிகளை இந்த வழக்கில் நானோ, எனக்கு முன்பு விசாரித்த காவல் ஆய்வாளர் திரு.தங்கமுனியசாமி அவர்களோ விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையிலும் பஞ்சாயத்தார்கள் இருசக்கர வண்டியானது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சாலையின் குறுக்கே கடந்த போது தான் விபத்து ஏற்பட்டதாக தெரிவித்துள்ளார்கள் என்றால் சரிதான். பிரேத பரிசோதனை அறிக்கையானது இரண்டு பக்கங்களை கொண்டதாக உள்ளது என்றால் சரிதான். எவ்வளவு காலத்திற்கு முன்பு அவர் இறந்தார் என்பது குறித்தும் பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். பிரேத பரிசோதனை அறிக்கையில் காலம் 18 என்று எந்த விபரங்களும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

10) பிரேத பரிசோதனை அறிக்கையானது உரிய சட்ட வகை முறைகளை பின்பற்றி செய்யப்படாததால் மேற்படி அறிக்கை ஏற்றுக் கொள்ளக் கூடியது இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் நான்கு சக்கர வாகனம் ஆனது ஆறு நாட்கள் காலதாமதமாக மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் இறந்து போன நபர்கள் சென்ற இருசக்கர வாகனம் ஆனது 29 நாட்கள் காலதாமதமாக மோட்டார்

வாகன ஆய்வு அறிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு இறந்து போன நபரின் R.C.புக், வாகன ஓட்டுநர் உரிமம் ஆகியவை வழங்கப்பட்டதாக தெரியவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று சாலையில் வாகனத்தின் டயர் மார்க், ஸ்கிட் மார்க் ஆகியவை குறித்து குறியீடு செய்ய மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களை சம்பவ இடத்திற்கு வர சொல்லி கடிதம் எதுவும் வைக்கப்பட்டதாக இல்லை என்றால் சரிதான்.

11) இவ்வழக்கில் இறந்து போன நபர்கள் தலைக்கவசம் அணிந்ததாக தெரியவில்லை என்றால் சரிதான். விபத்தானது இறந்து போன ராஜேந்திரன் என்பவரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றாலும் நான்கு வழி தேசிய நெடுஞ்சாலையில் திடீரென கிழக்கிலிருந்து மேற்காக சாலையின் குறுக்கே இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. நத்தம்– சாத்தம்பாடி பிரிவிற்கு நத்தம் டு மதுரை நான்கு வழி தேசிய நெடுஞ்சாலையில் மேற்கு பக்கம் உள்ள மதுரை–நத்தம் வரக்கூடிய பகுதி வழியாக தான் வாகனங்கள் செல்ல வேண்டும் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் திரு தங்கமுனியசாமி மற்றும் நான் சொல்லும் விதத்தில் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றாலும் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,
Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.04.08 14:49:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்